JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.368/2012 Date: 22.12.2020. P.W. 2

| | | |
|---|---|---|
| பெயர் | | ரவிச்சந்திரன் |
| தந்தை பெயர், க/பெ | ° | |
| முகவரி | ° | |
| கிராமம் | ° | |
| மாவட்டம் | ° | |
| ஜாதி | ° | |
| தொழில் | ° | |
| மதம் | ° | |
| வயது | ° | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 22th day of December 2020.

**முதல் விசாரணை** - நான் தற்சமயம் திருப்பதியில் வசித்து வருகிறேன். கடந்த 1 1/2 வருட காலமாக வசித்து வருகிறேன். நான் தற்சமயம் திருப்பதியில் உள்ள எஸ்.வி..ஐ.எம்.எஸ். மருத்துவமனையில் உதவி ஆலோசகராக கடந்த ஜீலை 2019லிருந்து இன்று வரை பணிபுரிந்து வருகிறேன். நான் வழக்கு சம்பவத்தின் போது குருப் சென்டரில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வந்தேன். அசா1 மனோகரன் என்பவரை எனக்கு தெரியும். மேற்படி மனோகரர் என்பவர் நான் ஆவடியில் பணிபுரிந்த போது அவர் Deputy commandant ஆக பணிபுரிந்து வந்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியானவர் மேற்படி அதே அலுவலகத்தில் காசாளராக வேலை பார்த்து வந்தார். நான் கடந்த 2008ம் வருடத்திலிருந்து மேற்படி ஆவடியில் உள்ள குரூப் சென்டரில் பணிபுரிந்து வந்த போது அங்கு Audit மூலமாக தணிக்கை அதிகாரிகள் மேற்படி நிறுவனத்தை தணிக்கை செய்தார்கள். அந்த தணிக்கையின் போது மேற்படி நிறுவனத்தில் நடந்த வரவு, செலவு கணக்குகளில் குறைவு ஏற்பட்டது. மேலும் மேற்படி பணம் குறைவிற்கு காரணம் ஆஜர் எதிரி தான் காரணம் என்று சொன்னார்கள். மேற்கண்ட விவரத்தை மேற்கண்ட அலுவலக அதிகாரிகள் சொன்னார்கள். இது சம்பந்தமாக டேங்க் பேக்டரி காவல் நிலையத்தில் அசா1 மனோகரன் புகார் கொடுத்தார். மேலும் அசா1 தான் மேற்கண்ட நிறுவனத்தின் கணக்கு அதிகாரி ஆவார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

எங்கள் குருப் சென்டரில் 5 பெட்டாலியன்கள் உள்ளன. மேற்படி 5 பெட்டாலியன்களில் உள்ள பணியாளர்களின் சம்பளம் மற்றும் பணி சம்பந்தமான ஆவணங்களை பராமரிப்பது எங்கள் குரூப் சென்டர் தான். எங்களுடைய உடனடி மேல் அதிகாரி கணக்கு அதிகாரி அசா1 ஆவார். அவருக்கு கீழ் 4 தலைமை எழுத்தர்கள் வேலை செய்கிறோம். அதில் பணபிரிவுக்கான தலைமை எழுத்தராக பெரும்பான்மையான காலம் நான் தான் பணி செய்தேன். எனக்கு கீழ் 1 காசாளர் உள்ளார். அவருக்கு கீழ் 1 உதவி காசாளர் உள்ளார். அவர்களை தவிர பண்ட் கேசியர் மற்றும் உதவி பண்ட் கேசியர் உள்ளார்கள். 1 அட்ஜஸ்மன்ட் கிளார்க் உள்ளார். 06.08.2008க்கு முன்பு நடந்த சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சி.ஆர்.பி.எப் அக்கவுண்ட்ஸ் மெனுவல் படி அனைத்து பணபரிவர்த்தனைக்கும் பணபிரிவு தலைமை எழுத்தரும், கணக்கு அதிகாரியும் கையெழுத்து இட

வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி தணிக்கை குழுவில் நான் இல்லை என்றால் சரிதான். தணிக்கை குழுவில் யார் யாரை விசாரித்தார்கள், என்ன நடந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. வங்கியில் பணப்பரிமாற்றம் குறித்து கணக்கு அதிகாரிக்கும், காசாளருக்கும் தான் தெரியும், எனக்கு எதுவும் தெரியாது. காசாளர் பணம் கொடுக்கும் போது என்னுடைய பார்வைக்கு வைக்கபடுவது இல்லை, கணக்கு அதிகாரியிடம் தான் பார்வைக்கு வைப்பார்கள். பரிவர்த்தனை முடிந்த பிறகு கணக்கு புத்தகத்தில் பதிந்த பிறகு தான் என் சுருக்கு ஒப்பத்திற்கு வைக்கபடும். அவ்வாறு நான் காசாளர் என் சுருக்கு ஒப்பத்திற்கு வைக்கும் கணக்குகளை சரிபார்த்து சரியாக உள்ளதாக ஒப்பம் இடும் போது ஏதாவது குறைகளை கண்டு உள்ளேனா என்றால் என்னிடம் வரும் போது அவை தெரிய வராது. எந்த எந்த கணக்கின் கீழ் என்ன என்ன வகையில் பணம் அனுப்பபட்டது என்று சரிபார்ப்பது என் வேலை என்றால் சரியல்ல, என் வேலை பணத்தை மொத்தமாக கூட்டி பார்ப்பது தான். கணக்கு புத்தகத்தில் நான் சரிபார்க்கபட்டது என்று சுருக்கு ஒப்பம் இடுவேன் என்றால் சரிதான், காசாளர் கொடுக்கும் ஆவணங்களின் அடிப்படையில் அவ்வாறு சுருக்கு ஒப்பம் இடுவேன். பயனாளிகளுக்கு அனுப்பவேண்டிய பணங்களை சரிபார்த்து அனுப்புவது கணக்கு அதிகாரியும், காசாளரும், உதவி காசாளரும் தான். காசாளர் பயனாளிகளுக்கு பணங்களை நேரடியாக கொடுக்க முடியாது என்றாலும் என்னுடைய மற்றும் கணக்கு அதிகாரியின் ஒப்புகை பெற்று தான் கொடுக்க முடியும் என்றால் சரியல்ல, கணக்கு அதிகாரியின் ஒப்புகை பெற வேண்டும், என்னுடைய ஒப்புகை அல்ல. சம்பவ அலுவலகத்தில் நடைபெறும் அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் கணக்கு அதிகாரியும், நானும் தான் பொறுப்பு என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் பிறர் செய்த தவறை மறைப்பதற்காக எதிரி பலிகடா ஆக்கப்பட்டார் என்றால் சரியல்ல. நான் சி.ஆர்.பி.எப். முன்னாள் ஊழியர் என்பதால் அதிகாரிக்கு ஆதரவாக மாறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur.